# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions :SC.No.301/2017
Deposition of Witness for Prosecution PW-1
Name :திருமதி.மாது
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 29th day of November-2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது மாரமங்கலம் காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். இறந்த குப்புசாமி எனது கணவர். எதிரிகளை தெரியும். என் மாமியாருக்கு இரண்டு கணவர்கள். முதல் கணவர் இறந்த பின்னர் என் மாமியாரை 2 வது திருமணம் செய்து கொண்டார். அவ்வாறு இரண்டாவது திருமணம் செய்து கொண்ட என் மாமியாரின் கணவர் பெயர் கத்திக்கார பெருமாள். முதல் கணவர் மூலம் என் மாமியாருக்கு மாணிக்கம், ராஜாங்கம் ஆகிய இரண்டு மகன்கள். இரண்டாவது கணவர் மூலம் என் மாமியாருக்கு என் கணவர் குப்புசாமியும், குமாரும் மகன்கள். கண்ணகி என்ற மகளும் இருந்தார். எங்களுக்கு விவசாய நிலங்கள் இருக்கிறது. அதனை சிலவற்றை பிரித்து கொடுத்து விட்டு அரை ஏக்கர் நிலத்தை என் மாமியார் மாமனார் தங்கள் கை வசம் வைத்துக் கொண்டார்கள். என் மாமியார் மாமனாருக்கு வைக்கப்பட்டிருந்த நிலத்தை என் கணவரும் நாங்களும் பார்த்துக் கொண்டோம். அவர்களையும் நாங்கள் தான் பார்த்துக் கொண்டோம். 5 வருடங்களுக்கு முன்பு எட்டாவது மாதம் மதியம் 1-30 மணியளவில் ராஜாங்கம் மேற்படி காட்டில் நானும் என் மகள் தீபாவும், தங்கராஜும் என் கணவரும் வேலை பார்த்து விட்டு வெளியே போகும்போது மேற்படி நிலத்தை அதாவது என் மாமனார் மாமியார் பிரித்துக் கொடுக்காமல் தங்கள் கை வசம் வைத்துக் கொண்ட நிலத்தை எவ்வாறு நீ ஓட்டலாம் என்று சொல்லி துப்பாக்கியால் ராஜாங்கம் என் கணவரின் இடது காலில் சுட்டு விட்டார். துப்பாக்கியால் சுட்டும் சாகவில்லை என்று சொல்லி துப்பாக்கி கட்டையால் எனது

கணவரை அடித்தார். அதனால் நாங்கள் பயந்துகொண்டு கிட்ட போகவில்லை எதிரிகளும் கிட்டே வந்தால் உங்களையும் சுட்டு விடுவோம் என்று மிரட்டினார்கள். எதிரி ராஜாங்கம் தான் சுட்டார். பின்னர் துப்பாக்கியை அங்கேயே போட்டு விட்டு போய் விட்டார்கள். 2 வது எதிரி எதுவும் செய்யவில்லை. அவர் நல்லவர். பின்னர் ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ 1. பின்னர் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்து விசாரித்தார்கள். என் கணவர் அதே இடத்தில் இறந்து விட்டார். போலிசார் வந்து பார்த்து விட்டு பிரேதத்தை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பு)

இல்லை.

Sd/- Tmt.Madhu

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.301 /2017
Deposition of Witness for Prosecution PW-2
Name :திரு. தங்கராஜ்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 29th day of November- 2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது ஏற்காடு மாரமங்கலத்தில் குடியிருக்கிறேன். இறந்த குப்புசாமியின் மகன் தீபாவை நான் திருமணம் செய்துகொண்டிருக்கிறேன்., எதிரிகளை தெரியும். எதிரி ராஜாங்கம் என் மாமனாரின் அண்ணன். 2 வது எதிரி கொல்லம்பட்டறை வைத்து வேலை செய்கிறார். 22-8-2016 ல் பகல் 1 மணியளவில் நாங்கள் காட்டில் வேலை செய்துகொண்டிருந்த போது 1 வது எதிரி அங்கு வந்து என் மாமனாருடன் கெட்ட வார்த்தைகளால் பேசி சண்டை போட்டார். அப்போது என் மாமனார் குப்புசாமி என்னடா பேசுகிறாய் என்று சொல்லிக்கொண்டு 1 வது எதிரி நின்ற இடத்திற்கு சென்றார். அப்போது 1 வது எதிரி தான் வைத்திருந்த துப்பாக்கியால் என் மாமனாரை இடது தொடையில் சுட்டு விட்டார். என் மாமனார் மயங்கி கீழே விழுந்து விட்டார்., பின்னர் துப்பாக்கி கட்டையால் என் மாமனாரை 1 வது எதிரி தலை மற்றும் முகம் கை ஆகிய இடங்களில் தாக்கினார். பக்கத்தில் வந்தால் சுட்டு விடுவோம் என்று 1 வது எதிரி மிரட்டியதால் நாங்கள் பயந்து கொண்டு கிட்டே போகவில்லை. 1 வது எதிரி மேலே கூறியவாறு என் மாமனாரை சுட்டு பின்னர் தாக்கி விட்டு அங்கிருந்து சென்று விட்டார். 2 வது எதிரி அப்போது அங்கு வரவில்லை. பின்னர் என் மாமனாரை போய் பார்த்த போது அவர் அங்கேயே இறந்து விட்டார். பின்னர் என் சின்ன மாமனார் குமாருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். பின்னர் அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அன்று மாலை 6 மணிக்கு

போலிசார் வந்து பார்த்து விசாரித்தார்கள். பின்னர் பிரேதத்தை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( 2 வது எதிரி தரப்பில்)

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசார் விசாரணையின்போதும் சொன்னேன். வேறு எதுவும் சொல்லவில்லை.

குறுக்கு விசாரணை ( 1 வது எதிரி தரப்பில்)

இல்லை.

Sd/- Thangaraj

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.301/2017
Deposition of Witness for Prosecution PW-3
Name :திரு. குமார்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 29th day of November- 2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது வெங்கட்டசமுத்திரத்தில் குடியிருக்கிறேன். அது தருமபுரி மாவட்டத்தில் இருக்கிறது. இறந்த குப்புசாமி எனது அண்ணன். எதிரிகளை தெரியும். 22-8-2016 அன்று அ.சா.2 எனக்கு போன் செய்து எனதுமாமனார் குப்புசாமியை எனது பெரிய மாமனார் ராஜாங்கம் துப்பாக்கியால் சுட்டு விட்டதாக சொன்னார். பின்னர் நான் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்று அவரை கூட்டிக்கொண்டு ஏற்காடு காவல் நிலையம் வந்தோம். அங்கு அ.சா.1 புகார் கொடுத்தார். எனது மாமனார் குப்புசாமி அவரது அம்மாவிற்கு விட்ட இடத்தை விவசாயம் செய்து வந்ததால் 1 வது எதிரி தனக்கு பிரித்துக்கொடுக்க சொல்லி கேட்டுமேலே கூறியவாறு செய்து விட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை( 2 வது எதிரி தரப்பில்)

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசார் விசாரித்த போதும் சொன்னேன். வேறு எதுவும் சொல்லவில்லை.,

குறுக்கு விசாரணை( 1 வது எதிரி தரப்பில்)

இல்லை.

Sd/- Kumar

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.